# ஸ்ரீ கந்த சஷ்டி கவசம்

## ஸாயீகுருகோடி தர்மா சேவா

TatTvamAsi

Promoting Global Peace & Universal Harmony since 2008


**Om Sri Kodi Baba Aalayam**

No. 8, 2nd Street, Lakshmi Nagar, Madipakkam, Chennai - 600091

+91 44 225 83104 +91 94443 83104 info@saigurukodi.org

www.kodidharma.org | www.saigurukodi.org

# ஸ்ரீ கந்த சஷ்டி கவசம்

## ஸாயீகுருகோடி தர்மா சேவா

TatTvamAsi

Promoting Global Peace & Universal Harmony since 2008


**Om Sri Kodi Baba Aalayam**

No. 8, 2nd Street, Lakshmi Nagar, Madipakkam, Chennai - 600091

+91 44 225 83104   +91 94443 83104   info@saigurukodi.org

www.kodidharma.org | www.saigurukodi.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கந்த சஷ்டி கவசம் |
| பக்கங்கள் | : | 24 |
| அளவு | : | 15cm x 19 cm |
| பதிப்பு | : | 2021 |
| விலை | : | |

இவர்களுக்காக
**ஸ்ரீ ராம நாம வங்கியின்**
**பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ்**
ராம மந்திரம், 2/3, வினாயகம் தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.
தொலைபேசி : 044 24893736


# லோகோ - தாத்பர்யம்

தாமரை சுயத்தைக் குறிக்கிறது

தாமரையின் அடியில் உள்ள சேற்று நீர் அறியாமை (சம்சாரம் / அஞ்ஞானத்தைக்) குறிக்கிறது.

தாமரைத் தண்டு அறியாமை (அஞ்ஞானத்திலிருந்து) வெளிவருவதற்கான மனிதர்களின் எளிமையான முயற்சியைக் குறிக்கிறது.

தாமரை இலைகள் குருவின் (ஞான) வார்த்தைகளைக் குறிக்கின்றன.

தாமரை இதழ்கள் சப்த ரிஷிகள் வசிக்குமிடத்தைக் குறிக்கின்றன - குரு பீடம்.

சூரியன் குருவைக் குறிக்கிறது.

சூரியனின் இதயத்தில் உள்ள ஓம் 'சுய' (பிரம்மம்) விழிப்புணர்வைக் குறிக்கிறது

தத் த்வம் அஸி

ஸ்ரீ முருகன் துணை

**தேவராய சுவாமிகள் பாடிய**

# கந்த சஷ்டி கவசம்

காப்பு

சஷ்டி விரதத்துடன் இதனை ஓதுபவர் அனைத்தும் பெற்று பகை நீங்கி செம்மையாய் வாழ்வர்.

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம், நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் – கதித்துஓங்கும்
நிஷ்டையும் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

**குறள் வெண்பா**

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

நூல்

நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட

மைய நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக!

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!

ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விநபவ சரஹண வீரா நமோநம!
நிபவ சரஹண நிறநிற நிறென

வசர ஹணபவ வருக வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்

கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக!

ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்

ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்

பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து!
எந்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோ தனென்று
உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!

அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விழி செவி இரண்டும் வேலவர் காக்க!

நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!

கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க!
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்ன வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண் குறி இரண்டும் அயில்வேல் காக்க!
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வடிவேல் காக்க!
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!

ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க!

முன்கையி ரண்டும் முரண்வேல் காக்க!
பின்கையி ரண்டும் பின்னவள் இருக்க!
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக!
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட,
பில்லி சூனியம் பெரும்பகை அகல,
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக

விடு விடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்!
ஈரேழுலகும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே! சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொளி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை

இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பாலகு மாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொர்ணமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க! வாழ்க! வடிவேல் வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குரு வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குற மகளுடன்!
வாழ்க! வாழ்க! வாரணத் துவசம்!
வாழ்க! வாழ்க!என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்

பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் செயலது அருள்வர்
மாற்றல ரல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள எந்தன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

★★★★★



## ஸ்கந்த ஜோதி சேவா| Skanda Jyoti Seva | स्कन्द ज्योती सेवा

ஸ்கந்த ஜோதி சேவா **தை பூசம், கந்த சஷ்டி திருவிழா** மற்றும் பிரதி மாதம் **கிருத்திகை நட்சத்திரம், சஷ்டி திதியன்றும்** மற்றும் அறிவிக்கப்பட்ட விசேஷ தினங்களில் நடைபெறும்.

இந்தப் பூஜை நமது குடும்ப வாழ்வு நலம்பெற செய்யப்படுவதால், சுமங்கலிகள், கன்னிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் ஆண்கள் கலந்து கொள்ளலாம்.

**குறிப்பு:** பூஜையில் கலந்து கொள்வதற்கு முன்னர் தாய், தந்தையர் வீட்டில் இருந்தால் அவர்களை நமஸ்கரித்த பின்னரே, ஆலயம் வந்து பூஜையில் கலந்து கொள்ள வேண்டும். தாய் தந்தையர் அருகில் இல்லாதவர்கள், பூஜையை ஆரம்பிக்கும் முன்னர், அவர்களை மானசீகமாக நமஸ்கரித்த பின்னரே பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

**எப்பொழுது**

தை பூசம்
கந்த சஷ்டி திருவிழா
கிருத்திகை நட்சத்திரம்
சஷ்டி திதி
அறிவிக்கப்பட்ட விசேஷ தினங்கள்

**யாருக்கு**

சுமங்கலிகள்
கன்னிப் பெண்கள்
குழந்தைகள்
ஆண்கள்

**எங்கே**

ஓம் ஸ்ரீ கோடி பாபா ஆலயம்

**பலன்கள்**

- பெண்களின் ஆயுள் மற்றும் ஆரோக்கியம், சுமங்கலித்துவம் நீடிக்கும்.
- எதிரிகள், பிணிகள் மூலம் வரும் தடைகள் நீங்குதல்.
- குழந்தைகளின் கல்வி, நன்னடத்தை சிறப்புறுதல்.
- விவேகமும், ஞானமும் மேம்படுதல்.

**நன்கொடை**

₹400 (அன்னதானத்திற்காக)

### முருகனின் அழகும் அருளும்

மநஸிஜ கோடி கோடி லாவண்யாய: 'மநஸிஜ கோடி கோடி' - கோடி கோடி மன்மதர்கள்.

கோடியைக் கோடியால் பெருக்கினால் எவ்வளவு பெரிசு? அதுதான் 'கோடி கோடி'. ஸுப்ரஹ்மண்யர் கோடி கோடி மன்மத லாவண்யராக இருப்பதுதான் ஆச்சர்யம். இவர் யார்?

பரமேச்வரனின் புத்ரர். அந்தப் பரமேச்வரனோ மன்மதனை அப்படியே பஸ்மம் பண்ணினவர். எந்த நேத்ராக்னியினாலே அவர் மன்மதனைப் பொசுக்கினாரோ அதே நேத்ராக்னியிலிருந்து உண்டானவர் ஸுப்ரஹ்மண்யர். காமத்திலே பிறக்காமல் ஞானத்திலே பிறந்தவர். ஞானமே லோகத்தை ரக்ஷிக்க வேண்டும் என்று கருணாமூர்த்தியாக ஆன ஸ்வரூபம் என்று தத்வார்த்தம். - **ஸ்ரீ மஹா பெரியவா**

## கந்த ஜோதி அனுஷ்டானம் (வழிபாட்டு முறை)

1. பூஜைக்குரிய பொருட்களை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

- பஞ்சமுக விளக்கு (சந்தனம், குங்குமம், பூ வைத்தது)
- தாம்பாளத் தட்டு
- திரி
- நெய்
- தீப்பெட்டி
- விபூதி
- குங்குமம்

2. பூஜையில் சுமங்கலிகள், கன்னிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் ஆண்கள் கலந்து கொள்ளலாம். பூஜையை கிழக்கு, மேற்கு அல்லது வடக்கு முகமாக மனையிலோ அல்லது விரிப்பிலோ அமர்ந்து செய்ய வேண்டும்.

3. கீழே அமர்ந்தபின் வலது தொடையின் மேல் இடது கையை மேல் நோக்கி வைத்து, வலது கையை அதன் மேல் மூடுவது போல் வைத்துக் கொள்ளவும். கண்களை மூடிக் கொண்டு, ஸ்ரீ விநாயகப் பெருமானை மனத்தில் துதித்து, பின் சங்கல்பத்தை மூன்று முறை சொல்லி தீபத்தை ஏற்றி பூஜையை ஆரம்பிக்கவும்.

சங்கல்பம்: (3 முறை சொல்லவும்)

**குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு:**
**குருர் தேவோ மஹேச்வர: ।**
**குரு ஸாக்ஷாத் பரப்ரஹ்ம**
**தஸ்மை ஸ்ரீகுரவே நம: ॥**

4. முதலில் திருவிளக்கு போற்றி (108) பாராயணம் செய்து கொண்டே தீபத்தை, பராசக்தி தேவியாக பாவித்து, குங்குமத்தை மட்டும் தீபத்திற்கு அர்ச்சனை செய்ய வேண்டும்.

5. பின் ஸ்ரீ ஸ்கந்த சஷ்டி கவசத்தை ஸ்ரத்தையுடன் பாராயணம் செய்து கொண்டே விபூதியை ஸ்கந்தனாக பாவித்து சமர்ப்பிக்க வேண்டும்.

7. ஸ்ரீ ஸ்கந்த சஷ்டி கவசத்தை மூன்று முறை ஸ்ரத்தையுடன் பாராயணம் செய்து முடித்தபின்னர், தீபத்தை நமஸ்கரித்து, பூஜையை நிறைவு செய்ய வேண்டும்.

8. பூஜை முடிந்த பின்னர் விபூதி, குங்குமத்தை தனியே எடுத்து வைக்கவும்.

9. பூஜைக்குப் பயன்படுத்திய விபூதி, குங்குமத்தை தினமும் குளிப்பதற்கு முன்னர், உடம்பில் நாபிக்கு (தொப்புள்) மேல் தேய்த்து பின் குளிக்கவும்.

பொங்கும் தர்மம் எங்கும் ஓங்குக !

## AyushDhanvantri Seva | AyushAarogya Seva | DharmaVaidya Seva

### AyushDhanvantri Seva - Free Healthcare available and accessible

Over the years, SaiGuruKodi **spreading Wellness around by providing need based free healthcare, covering different age groups. Specialty focused Medical screening camps are conducted from time to time.**

♦ Periodical Allopathy Medical camps conducted at both Onsite(SGK), Offsite (Govt. Schools) & community camps.

♦ Regular screening done for Anthropometry, BP & Diabetes and periodical camps on various departments like General Medicine, Ortho, Eye, Cardio, Dermatology, ENT, Geriatic & Dental etc with the support of our health care providers / partners.

♦ Special focus on Women's health and medical camps for screening Cervical cancer, Osteoporosis & Gynaecology counseling.

### AyushAarogya Seva - Prevention is better than cure

SaiGuruKodi Trust has been **extending preventive care to people / local communities, from time to time, based on specific health care needs leveraging the traditional health care wisdom prescribed under AYUSH.**

A series of awareness programmes / workshops / individual counseling sessions were organised on various aspects of health care. During these sessions, the importance of maintaining blood sugar level, BP and life style modifications as required are being suggested to Stay Fit Be Healthy.

Awareness sessions on

- Nutrition & Food safety.
- Cervical and Breast cancer
- Malaria, Dengue & COVID19
- AYUSH - Ayurveda, Anapana / Vipassana & Homeopathy camp
- other pertinent health care challenges

**Om, May All become Happy,**
**May All be Free from Illness.**
**May no one Suffer.**
**May All See what is Auspicious,**
**Om Peace, Peace, Peace.**

### DharmaVaidya Seva - Healthcare @ the last mile

**Making health care available and accessible at the last mile to children, women, aged, poor, differently abled, etc.**

♦ TeleConsultation – Doctor available on call for Medical consultation on prefixed/ announced date & time.

♦ Mobile IRT Checking done D2D to local community.

♦ Preventive measures– distribution of herbal concoctions

♦ **NilaVembuKudineer** (நிலவேம்பு குடிநீர்) for Dengue prevention. Also partnered with Greater Chennai Corporation, Madipakkam.

♦ **KabasuraKudineer** (கபசுரக் குடிநீர்), Siddha Herbal concoction considered an "Immunity Booster" (Endorsed by Ministry of AYUSH & TN Govt.)

♦ **AdathodaKudineer** (ஆடாதொடா குடிநீர்), highly effective for treating all respiratory illness at Onsite, Madipakkam & Thiruneermalai residents, Municipal Corporation staff, EB staff, Sanitary workers, Vendors, Daily wage earners, Shop keepers etc.

Donation : ₹ 1000 (in multiples of ₹ 500 )

Dharma Flourish Everywhere

## பாரத் உணவளித்தல் - நர நாராயண சேவா
## Feeding Bharat - Nara Narayana Seva

ஒரு தேசம், ஒரு தர்மம் - அதுவே நமது ஸனாதான தர்மம்
www.feedingbharat.org | www.saigurukodi.org

தர்ம பூமியான பாரதம், ஸனாதன தர்மத்தை, தனது வளமான ஆன்மீக நெறிகள் மற்றும் வாழ்க்கை நடைமுறைகள் மூலமாக உலகுக்கு வழிகாட்டியாக திகழ்கிறது. அம்முறைகளில் ஒன்றான ஏழை எளியோர்களுக்கு உணவளிக்கும், அன்னதானத் தொண்டு நமது தொன்மையான மரபாகும். பல மகான்களும் இத்தொண்டை பல்வேறாக வலியுறுத்தி உள்ளனர்.

நமது டிரஸ்ட், ஸ்ரீ கோடி ஸாயீ பாபாவின் அருளாணையின்படி, 16-ஆகஸ்ட்-2008 முதல் இடைவிடாது, தினசரி-ஒவ்வொரு நாளும், பசிப்பிணி போக்குவதை தன்னுடைய தலையாயக் குறிக்கோளாக கொண்டு இயங்கி வருகிறது. மேலும், தினசரி அன்னப்பிரசாத திட்டத்தின் (நர-நாராயண சேவா) மூலம் தர்மம் செய்வதை ஊக்குவிக்கிறது. இதனால், நூற்றுக்கணக்கான ஏழை மக்கள் பயன்பெறுகிறார்கள்.

தற்போது, உங்களுடைய தொடர் ஆதரவால், பாரத் உணவளித்தல் FeedingBharat - www.feedingbharat.org மக்கள் இயக்கமாக உருவாகி செயல்பட்டு வருகிறது. சாதி, மதம், இனம், மொழி, சமூக அந்தஸ்து மற்றும் தேசியம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் இந்த சேவை வழங்கப்படுகிறது.

நமது டிரஸ்ட் , தரமான பொருட்களின் மூலம், ஆரோக்கியமான, ஊட்டச்சத்துள்ள உணவை, சுகாதார முறையில் தயாரித்து, ஸ்ரீ கோடி ஸாயீ பாபா பிரசாதமாக டிரஸ்ட் / ஆலய வளாகத்திலும் மற்றும் 200-கும் மேற்பட்ட ஏழை எளியோர் / பசி இடங்களை

> ''அன்னதானத்தால் ப்ராணனன்கள், ப்ராணனன்களால் பலம், பலத்தால் தவம், தவத்தால் சிரத்தை, சிரத்தையால் கூரிய புத்தியையும், கூரிய புத்தியால் திடமான சங்கல்பம், திடமான சங்கல்பத்தால் மனதெளிவு, மனதெளிவால் சாந்தி, சாந்தியால் நிலையான சித்தம், நிலையான சித்தத்தால் உண்மை மறவாமை, உண்மை மறவாமையால் அதையே இடைவிடாது நிலைத்திருத்தல், அப்படிப்பட்ட நினைவால் விஞ்ஞானம், விஞ்ஞானத்தால் ஆத்மாவையும் ஒருவன் உணர்ந்து அனுபவிக்கிறான். ஆகையால் அன்னத்தை அளிப்பதால் இவை அனைத்தையும் அளிக்கிறான்.
>
> அன்னத்திலிருந்து பிராணிகளுக்கு பிராணன்கள் வளர்கின்றன. பிராணன்களால் மனதும், மனதால் விஞ்ஞானமும், விஞ்ஞானத்தால் ஆனந்தமும், அதனால் உலகின் தோற்றுவாயாகிய பிரம்மமும் அடையப்படுகிறது.'' -
> **மஹாநாராயண உபநிக்ஷத் - 79.15**

(Hunger Spots) கண்டறிந்தும், குறிப்பறிந்தும் பசியாற்றி வருகிறது. மேலும், இச்செயல்கள் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட, தங்களது மேலான ஆதரவை தொடர்ந்து நல்குமாறு வேண்டுகிறோம்.

COVID-19 நோய் தொற்றிலிருந்து மக்களைக் காப்பதற்காக நடைமுறை படுத்தப்பட்ட ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட பல ஏழை, முதியவர்களும், தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் எளிய மக்களுக்கும், வெளி மாநிலத்தார்க்கும், மாற்று திறனாளிகளுக்கும், ஆதரவற்றோர்க்கும் மற்றும் தூய்மை / பொது பணியாளர்களுக்கும் நமது டிரஸ்ட் தேடிச் சென்று உணவு வழங்கி வருகிறது.

ஜய பாரதம்

பொங்கும் தர்மம் எங்கும் ஓங்குக

★★★★★★★★

## Annadaan Benefits & அன்னதானத்தின் பலன்கள்

### அரிசி, பருப்பு, தானியங்கள் மற்றும் மளிகை சாமான்கள்

வேதங்களில் தானியங்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் கூறபட்டிருக்கிறது. பூமியில் விளைந்த தானியங்கள் அனைத்தும் சிவபெருமானுக்கு இஷ்டமானவை என முனிவர்கள் கூறியுள்ளனர்.

சமைப்பதற்கு முன், தானியங்களுக்குள் இருக்கும் உயிர் சக்தி செயலற்றதாக இருக்கிறது, ஆனால் நாம் அவற்றை சமைக்கும் போது, உயிர் சக்தி விழித்தெழுந்து, அவற்றைச் சுற்றியுள்ள நுட்பமான ஆற்றல்களை (நல்ல மற்றும் எதிர்மறையான) தன்னகத்தே எடுத்துக்கொள்ளும். அதனால்தான், சமைக்கப்படாத தானியங்கள் மட்டுமே கோயில்களுக்குத் தானமாக / தர்மமாக வழங்கப்படுகின்றன. கோயில்களில் நன்கொடையாக பெறப்பட்ட தானியங்கள் அக்னிக்குப் படைத்துவிட்டப்பின் பிரசாதமாக வழங்கப்படுவதால், அதன் தோஷங்கள் நீங்கி புனிதமடைகின்றன.

அன்னதான மளிகை சாமான்கள்
₹ 3000 (multiples of ₹1000)

எண்ணெய் / நெய்
₹ 1000 (multiples of ₹1000)

பால் / தயிர் சேவைக்கு
₹ 1000 (multiples of ₹ 500)

காய்கறிகள் சேவைக்கு
₹ 2000 (multiples of ₹1000)

அன்ன அக்னிசேவைக்கு
₹ 500 (multiples of 500)

மந்தாரை இலை / வாழை இலை
₹ 2000 (multiples of ₹ 1000)

தொன்னை / பேப்பர் தட்டு
₹ 700 (multiples of ₹ 500)

அன்னதான குடிநீர்
₹ 1000 (multiples of ₹ 500)

அன்னதான சேவைக்கு (ஒரு நாள்)
₹ 5000 (multiples of ₹1000)

**<u>எண்ணெய் / நெய்</u>**

அன்னதானத்திற்காகப் பயன்படுத்தப்படும் எண்ணெய் மற்றும் நெய் தானமாக வழங்குபவர்கள் நல்ல ஆரோக்கியத்தைப் பெறுவர்.

**<u>பால் / தயிர்</u>**

அன்னதானத்திற்காகப் பயன்படுத்தப்படும் பால் மற்றும் தயிர் தானமாக வழங்குபவர்கள் தங்கள் துன்பங்கள் நீங்கப்பெறுவர். அவர்களது வம்சம் விருத்தியாகும்.

**<u>காய்கறிகள்</u>**

அன்னதானத்திற்காகப் பயன்படுத்தப்படும் காய்கறிகளை தானமாக வழங்குபவர்களின் குழந்தைகளின் ஆரோக்கியம் மேம்படும்.

**<u>குடிநீர்</u>**

அன்னதானத்திற்காகப் பயன்படுத்தப்படும் குடிநீரைத் தானமாக வழங்குபவர்கள், மூதாதையர்களின் கடன் நீங்கப்பெற்று அவர்களது ஆசிகளைப் பெறுவர்.

**<u>அன்ன அக்னி சேவா</u>**

அக்னியின் மூலம் சமைக்கப்படும் உணவு புனிதமடைகிறது. உணவு விளைவித்த முறையினாலும், அதை வீட்டிற்குள் கொண்டு வந்து சேர்க்கும் முறையினாலும் ஏற்படும் அனைத்து தோஷங்களும் அகற்றப்படுகிறது. நாம் சமைத்த உணவை ஜடராக்னிக்கு (நமது வயிற்றில் உருவாகும் அக்னி, நாம் சாப்பிடும் உணவைச் செரித்து அன்னமய கோசத்தை உருவாக்குகிறது) படைத்தல், இறைவனுக்குப் படைத்ததற்கு சமமாகும்.

பக்தர்கள் நன்கொடையாக வழங்கும் கேஸ் சிலிண்டர், அன்னதானப்

பிரசாதம் செய்வதற்கு பயன்படுத்தப் படுவதால், அன்னதான சேவையின் சிறப்புகள் அனைத்தும் இந்தச் சேவைக்கும் பொருந்தும்.

★★★★★★★★

## <u>Donation - Bank details</u>

| | | |
|---|---|---|
| Name | : | Om Shri Sai Guru Kodi Charitable Trust |
| SB A/c Number | : | 500101012069639 |
| Bank Name | : | City Union Bank |
| Branch Name | : | Puzhuthivakkam |
| IFSC | : | CIUB0000599 (5th letter onwards Numeric) |
| UPI ID | : | saigurukodi@cub |

## தயிர் அன்னப்பிரசாத சேவா | Curd Rice Seva |दध्यन्नं सेवा

பாபா தம் பக்தர்களின் பசியாற்றவே, அன்னத்தைத் தன் பிரசாதமாக தினமும் வழங்குகிறார்.. பாபா தான் வாழ்ந்த காலத்தில், தினந்தோறும் பிரசாதமாக மோர் மற்றும் லஸ்ஸி வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தயிர் நமது உடலுக்கு குளிர்ச்சியையும், மனதிற்கு சாந்தத்தையும், திருப்தியையும் அளிக்கிறது.

இதனை விஞ்ஞானிகள், தயிரில் 'டிரிப்டோபன் (Tryptophan)' என்னும் அமினோ அமிலம், தயிர் அன்னத்தை உண்பவர்களுக்கு சுரக்கச் செய்து, அவர்களது மனநிலையைச் சீராக்கி, திருப்தியை அளிக்கிறது என்பதை ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளார்கள்.

'ஒரு ஜீவனுக்கு பசியினால் ஏற்படும் துன்பத்தைப் போக்குவதால் ஏற்படும் இன்பம் தான் மேலான இன்பம்'- வள்ளலார்

பசி ஒரு பிணியாகும். அன்னம் உயிர் நாடிக்கு அத்தியாவசியம். பசியோடு இருக்கும் ஒருவருக்கு எந்த பிரதிபலனும் எதிர்பாராமல் அன்னம் அளிப்பது, அவரது அன்னமய கோசத்திற்கு (உணவால் ஆன உடல்) உயிர் கொடுத்ததற்கு சமமாகும்.

பொங்கும் தர்மம் எங்கும் ஓங்குக

**எப்பொழுது**

தினசரி

**யாருக்கு**

அனைத்து பக்தர்கள்
பசியாற்றும் இடங்களில் உள்ள எளிய மக்கள்

**எங்கே**

ஓம் ஸ்ரீ கோடி பாபா ஆலயம்
பசியாற்றும் இடங்கள்

**பலன்கள்**

பசி ஒரு பிணியாகும். அன்னம் உயிர் நாடிக்கு அத்தியாவசியம். பசியோடு இருக்கும் ஒருவருக்கு எந்த பிரதிபலனும் எதிர்பாராமல் அன்னம் அளிப்பது, அவரது அன்னமய கோசத்திற்கு (உணவால் ஆன உடல்) உயிர் கொடுத்ததற்கு சமமாகும்.

**நன்கொடை**

₹ 1000 (in multiples)

## ஜல தான சேவா | Jal Daan Seva |जल दान सेवा

(Drinking Water) - தாக ஷாந்தி

நமது ஸ்ரீ கோடி பாபா ஆலயத்தில், உலக மக்களின் சுபிக்ஷத்திற்காக மழை தியானம் / கூட்டு பிரார்த்தனை, ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகிறது.

பாபாவின் பக்தர்களால் வழங்கப்படும் ஜல தானத்தின் மூலம், சுத்திகரிக்கப்பட்ட நீரைக் (R.O Plant) கொண்டு ஆலயத்தில் அனுதினமும் வழங்கப்படும் அன்னப்பிரசாதம் தயாரிக்கப்படுகிறது; அன்னதானம் நடைபெறும் போதும், பக்தர்கள் அருந்துவதற்கும் வழங்கப்படுகிறது; மேலும் தேவைக்கேற்ப சுத்திகரிக்கப்பட்டத் தண்ணீர் கேன்களும் வாங்கப்படுகின்றது; ஆலயப் பயன்பாட்டிற்குக்கான மற்ற பல விஷயங்களுக்கும் நீர் பயன்படுத்தப் படுகின்றது.

70 சதவிகிதம் நீரினால் ஆனது நமது உடல். நீரில் பிராண சக்தி இருக்கிறது. நாம் குடிக்கும் தண்ணீர் மூலமும் நமது உடலுக்கு பிராண சக்தி கிடைக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய உடலிலும் பிராணனமயகோசம் என்று கண்ணுக்கு புலப்படாத சக்தி / ஆற்றல் உள்ளது. ஒருவருக்கு ஜலதானமளித்தால் அவரது பிராணனமயகோசத்திற்கு சக்தி (உயிர்) அளித்ததற்கு சமமாகும்.

தண்ணீரை பூமிக்குள் தேடுவது ஆபத்து. அதை வானத்தில் இருந்து வரவழைக்கச் செய்.

பூமியில் வாழும் அனைத்து உயிர்களும் தங்களின் தாகத்தைத் தணித்துக் கொள்வதற்கும், பெரும்பாலான உயிர்களுக்கு உணவளிக்க கூடிய மரம், செடி கொடிகள் போன்றவை உயிர் வாழவும், செழித்து வளரவும் நீர் அவசியமாகிறது. மேலும் மனிதர்கள் அனைவரின் பசியை போக்கும் உணவு தானியங்களை உற்பத்தி செய்யவும் நீர் கட்டாயத் தேவையாகும்.

பொங்கும் தர்மம் எங்கும் ஓங்குக

**எப்பொழுது**

தினசரி

**யாருக்கு**

அனைத்து பக்தர்கள்
பசியாற்றும் இடங்களில்
உள்ள எளிய மக்கள்

**எங்கே**

ஓம் ஸ்ரீ கோடி பாபா ஆலயம்
பசியாற்றும் இடங்கள்

**பலன்கள்**

''நீர்க்கொடை அளிப்பவர்கள் செல்வம், நீடித்த புகழ், வெற்றி, நீண்ட ஆயுள் மற்றும் பித்ரு தோஷ நிவர்த்தி ஆகியவற்றை பெறுவர்.'' - மஹா பாரதம், அநுசாஸன பர்வம், பகுதி - 67

**நன்கொடை**

**₹1000** (in multiples)

**நீர் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும் வான் இன்று அமையாது ஒழுக்கு'.**
- திருக்குறள், வான் சிறப்பு - 20.

தண்ணீரின் முக்கியத்துவத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, எளிதாக விளக்கியுள்ளார் திருவள்ளுவர்.

## நீர் மோர் சேவா | Buttermilk Seva | नीर मोर सेवा

தாக ஷாந்தி

ஸ்ரீ கோடி பாபா ஆலயத்தில் ஒவ்வொரு கோடை காலத்திலும் மற்றும் விசேஷ தினங்களில், பாபாவின் பக்தர்களுக்கு நீர் மோர் வழங்கப்படுகிறது. மேலும், கோடைக் காலங்களில் பொது மக்களின் தாகத்தைத் தணித்து புத்துணர்ச்சி அளிப்பதற்காக மற்றும் பல பசியாற்றும் இடங்களிலும் நீர் மோர் வழங்கப்படுகிறது.

'நீர் மோரைத் தானமாக அளிப்பவர்களுக்கு கோபம் தணிந்து, மனத் தெளிவு கிட்டும். உடல் சூடு தணிவதால் ஆரோக்கியம் மேம்படும். ஞானமும், முக்தியும் கிட்டும்.'

வெண்ணெய்ச்சத்து சிலுப்பி நீக்கப்பட்ட இந்த நீர்மோர் உடலுக்கு குளிர்ச்சி தருவதுடன், ஜீரண சக்தியை அதிகரிக்கவல்லது.

நீர் சுருக்கி மோர் பெருக்கி என்று சொல்கிறது சித்த மருத்துவம். அதாவது நீரை கொதிக்க வைத்து சுருக்கி எடுத்து கொள்ள வேண்டும். மோரை பெருக்கி தயிராக எடுக்காமல் தயிரில் நீரை விட்டு மோராக பெருக்கி எடுத்துகொள்ள வேண்டும். இவை உடல் நச்சுக்களை வெளியேற்றுகிறது.

மோரில் இருக்கும் நல்ல பாக்டீரியாக்களான புரோபயாட்டிக் பாக்டீரியாக்கள் செரிமானத்தை துரிதமாக்குகிறது. சிறு குழந்தைகள் மந்தமாக இருந்தாலோ அல்லது சாப்பிட அடம்பிடித்தாலோ மோர் சாதத்தை கரைத்து கொடுத்தால் மந்ததன்மை நீங்கி சுறுசுறுப்படைவார்கள். அதோடு பசியின்மை பிரச்சனை நீங்கும். நன்றாக சாப்பிடவும் தொடங்குவார்கள்.

நீர் மோர் நான்கு வித்தியாசமான சுவைகள் (புளிப்பு, உப்பு, காரம், துவர்ப்பு) அடங்கியது. மோரில் பொட்டசியம், வைட்டமின் B12, கால்சியம், ரிபோப்ளேவின் மற்றும் பாஸ்பரஸ் சத்துக்கள் நிறைந்துள்ளது.

பொங்கும் தர்மம் எங்கும் ஓங்குக

**எப்பொழுது**

கோடைக் காலத்தில் மற்றும் விஷேச தினங்களில்

**யாருக்கு**

அனைத்து பக்தர்கள்
பசியாற்றும் இடங்களில் உள்ள எளிய மக்கள் .

**எங்கே**

ஓம் ஸ்ரீ கோடி பாபா ஆலயம்
பசியாற்றும் இடங்கள்

**பலன்கள்**

நீர் மோரைத் தானமாக அளிப்பவர்களுக்கு கோபம் தணிந்து, மனத் தெளிவு கிட்டும். உடல் சூடு தணிவதால் ஆரோக்கியம் மேம்படும். ஞானமும், முக்தியும் கிட்டும்.

**நன்கொடை**

₹ 500 (in multiples)

**தர்ம சாச்வத க்ஷேம நிதி**
**(ஓம் ஸ்ரீ ஸாயீ குரு கோடி டிரஸ்டிற்கான வைப்பு நிதித் திட்டம்)**

OM SHRI SAI GURU KODI CHARITABLE TRUST / ஓம் ஸ்ரீ ஸாயீ குரு கோடி சாரிடபிள் டிரஸ்ட் 2008 ஆம் ஆண்டிலிருந்து தினந்தோறும் அன்னதானம், ஏழை எளிய குழந்தைகளுக்குப் பள்ளி மற்றும் கல்லூரி கட்டண உதவி, அனைத்து தரப்பினருக்கும் பல்வேறு மருத்துவ முகாம்களின் மூலம் மருத்துவ உதவி, இயற்கைப் பேரிடர்களின்போது அல்லல் படுவோர்க்கு அன்னதானம் செய்தல், உலக மக்களின் அமைதிக்காகவும், க்ஷேமத்திற்காகவும், மழை வளத்திற்காகவும், மனிதகுல மேம்பாட்டுக்காகவும் பல்வேறு பிராத்தனைகளைச் செய்து வருகிறது.

தர்ம சாச்வத க்ஷேம நிதிக்கு, 1008 மெய்யன்பர்கள் ரூபாய் 1 இலட்சம் நன்கொடை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த வைப்புநிதியை தாங்கள் அன்னதானத்திற்காகவோ, கல்விப் பணிகளுக்காகவோ, ஏழை எளியோரின் மருத்துவ உதவிக்காகவோ வழங்கலாம்.

நிதிக்கு மனமுவந்து நன்கொடை வழங்க விரும்புவர்கள் ஆலய நிர்வாகத்தை அணுகவும். **தாங்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு 80(G) பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.**

**தர்ம சாச்வத க்ஷேம நிதி : ₹1,00,000**

பொங்கும் தர்மம் எங்கும் ஓங்குக

## Donation - Bank details

| | | |
|---|---|---|
| Name | : | Om Shri Sai Guru Kodi Charitable Trust |
| SB A/c Number | : | 500101012069639 |
| Bank Name | : | City Union Bank |
| Branch Name | : | Puzhuthivakkam |
| IFSC | : | CIUB0000599 (5th letter onwards Numeric) |
| UPI ID | : | saigurukodi@cub |

## ஓம் ஸ்ரீ கோடி பாபா ஆலயம் - உலக அமைதி மற்றும் ஷேமத்திற்காக

ஸனாதன தர்மமானது, தனது புராதானமான வேத ஞானம், தெளிவான ஆன்மீக நெறிமுறைகள், பொருள் செறிந்த கலாச்சார நடைமுறைகள் மற்றும் ஸ்வதர்மத்தை எந்த சூழலிலும் பின்பற்றுவது போன்ற விஷயங்களில் உலகுக்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்கிறது. இந்த தர்மத்தை பின்பற்றுவதால் நமது பாரதம் தர்ம பூமி, கர்ம பூமி, புண்ணிய பூமி என்று பெருமையுடன் அழைக்கப்படுகிறது.

> ‘கோடி பாபா ஆலயத்திற்கு வந்து தரிசனம் செய்த எவரும், தமது பிரார்த்தனைகளுக்கு உண்டான நிவாரணம் கிடைக்காமல் செல்வதில்லை. நம்பிக்கையிழந்தவர், நம்பிக்கை கொள்கிறார். நம்பிக்கை கொண்டவர், பக்தராகிறார். பக்தர், அறிவார்ந்தவர் ஆகிறார். அறிவார்ந்தவர், மெய்ஞானியாகிறார் ! ‘‘

### The Existential Realm

ஆலயம் (ஆ-லயம்), ஆத்ம-லயம் என்று பொருள் - உயிர்களில், ஆத்மாவின் ஆனந்தமான சங்கமம்!

**ஓம் ஸ்ரீ கோடி பாபா ஆலயம் (KBA)** ஆகஸ்ட் 16, 2008 அன்று (தமிழ்: 32 ஆடி, சர்வாதரி, பூர்ணிமா) உலக அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்காக அர்பணிக்கப்பட்டது . இது ஒரு பொது மறை ஆலயம்; உலக அமைதி, அன்பு மற்றும் நல்லிணக்கத்தை, தனிநபரின் அமைதி மூலம் அடைய முடியும் என்பதையும் நம்புகிறது.

KBA பொங்கும் தர்மம் எங்கும் ஓங்குக என்பதையே இலக்காகக் கொண்டு ஸனாதன தர்மத்தைப் போற்றுகிறது; மற்றும் கால நேரத்திற்கேற்ப பல்வேறு நிகழ்ச்சிகளையும், முயற்சிகளையும் மேற்கொள்கிறது. KBA ஒரு தர்ம சிந்தனை மையமாகும் - இங்கு உயர்ந்த தர்ம செயல்களைச் செய்வதற்கான உபாயங்களை ஒருவர் பெறலாம்.

புனித மூவர் - ஸத்குரு ஸ்ரீ கோடி பாபா, ஸ்ரீ ஷீர்டி ஸாயீ, ஸ்ரீ மஹா பெரியவாவின் விக்ரகங்கள், ஞான, கர்ம மற்றும் பக்தி மார்க்கத்தை குறிப்பதாக, இம்மார்க்கங்களை பின்பற்றும் பக்தர்களுக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது; எல்லா மதத்தவரும் பிரார்த்தனை மற்றும் தியானம் செய்வதற்குரிய வசதிகள் ஆலயத்தில் உள்ளன.

### The Spiritual Realm

**மனிதன் சத்-சித்-ஆனந்தத்தின் (நித்திய ஆனந்தம்) உருவகம்.**

வாசனைகள் (ஆசைகள் - பற்றுகள் - கடந்த கால நினைவுகள்), ஒருவரை தன்னுள் நோக்கித் திரும்பி சுயத்தையும், அமைதியையும் உணருவதைத் தடுக்கிறது. தர்மச் செயல்கள் (நல்ல கர்மங்கள்) வாசனைகளை அகற்றி ஒருவரின் ஸ்வதர்மத்துடன் இணைவதற்கு உதவுகிறது.

‘ஸனாதன தர்மத்தை கடைப்பிடிப்பதன் மூலம் மட்டுமே அமைதி, மன உளைச்சலின்மை மற்றும் பேரானந்தத்தை அடைய முடியும்‘. வேறு வழியில்லை.

## SaiGuruKodi Dharma - Impact Areas - Seva

### Livelihood

www.feedingbharat.org

- FeedingBharat (Food)
- NaraNarayana Seva
- Curd Rice Seva
- Vastra Daan Seva (Cloth)
- Jal Daan Seva
- Buttermilk Seva

### Health Care

- AyushDhanvantri Seva (Medical Camp)
- AyushAarogya Seva (Preventive)
- DharmaVaidya Seva (Last mile)

### KBA - Global Peace

www.kodidharma.org

- Pancha Deepa Seva
- Baba Vastra Seva
- Tulasitala Seva
- Bharata Akhand Deepa Seva
- Akhanda Dhuni Seva
- Panaka Seva

### Global Peace

- Pasu Seva (Gau Samrakshana)
- Stree Dharma Seva
- Dharma Deepa Seva
- Skanda Jyoti Seva
- Jnana Deepa Seva
- Jayanti - Aaradhana

### Education

www.vidya vikaas.org

- Vidya Vikas (Language Skills)
- BALA Vikas (Girl Child)
- Ekal Vidya (Skills)
- De-Stress (Anapana)
- Dhruv (Career Guidance)
- VignanVikas (Practical Science)
- GanithaVikas (Applied Maths)

### Self Consciousness

- Vipassana Meditation
- Atma Bodha
- Dinacharya Dharma

**Please send your Donation through Digital / Cheque / DD to the Trust address.**

Receipt with Prasadam will be sent on realisation of the amount.

**Om Shri Sai Guru Kodi Charitable Trust**

No.8, 2nd Street, Lakshmi Nagar, Madipakkam, Chennai - 600091, Tamilnadu, India.

Regd No. : 489 / 2012 | PAN : AAAT03424E

*** Donations received by this Trust are exempt under Section 80 G of the Income Tax Act, 1961.**

# பொங்கும் தர்மம்
# எங்கும் ஓங்குக




எல்லோரையும் நல்லோராக்கும்...

**ஸ்ரீ ராம நாம வங்கி**

சுதந்திரமாக நாமப்பணிகள் செய்து வரும் நாம அடிமைகள்



ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

அன்னதான ஸமாஜம்

'RAMA MANTHIRAM', No. 2/3, Vinayagam Street, West Mambalam, Chennai - 600 033.

Phone:- 044 24893736 / 8754000600 Website : www.namalayam.org e-mail:- ramamanthiram@gmail.com

Govindapuram: 0435-2473730 Trichy: 9443138655 Coimbatore: 9952834538 / 6382689346 Tiruvallore: 9444746222 Tambaram: 9789030562